# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2064/26 - 2018 මාර්තු මස 28 වැනි බදාදා - 2018.03.28

*2064/26 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆவது உறுப்புரையின் (1) உப உறுப்புரையின் வண்ணம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், 2015, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, 2018, மாச்சு மாதம் 28 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மைத்திரிபால சிறிசேன,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2018, மாச்சு 28.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| (1) | அவ்வறிவித்தலில் "இல. (4) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:- | |
| | (அ) | அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்; |
| | | 1. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் விடயங்கள் மற்றும் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுக்கு உரிய கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் தயாரித்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும். |
| | (ஆ) | அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 3, 5, 11, 14, 15, 16, 17, 18 மற்றும் 19 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலம்; |
| | (இ) | அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 2, 6, 7, 9, 10, 11, 12, 14, 15, 16, 17 மற்றும் 18 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலம்; |

1A-G 27374 - 377 (2018/03)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | | |
|---|---|---|
| | (ஈ) | அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள "மனிதவளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய மன்றம்" நிறுவனத்திற்குப் பின்னர் பின்வரும் நிறுவனங்களைச் சேர்ப்பதன்மூலம்;<br>• உணவு ஆணையாளர் திணைக்களம்<br>• இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் முகாமைக் கம்பனிகளும் அதனோடிணைந்த கம்பனிகளும் (வரையறுக்கப்பட்ட லிட்ரோ காஸ் இலங்கை கம்பனி தவிர) |
| | (உ) | அதன்படி நிரல் II இல் உள்ள நிறுவனங்களை மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்; |
| | (ஊ) | அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் சட்டங்களை நீக்குவதன் மூலம்;<br>• (1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) நிதிசார் நீதிச் சட்டம்<br>• (2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுச் சட்டம்<br>• (1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) இலங்கையின் பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுச் சட்டம்<br>• (1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) தேசிய இளைஞர் சேவைகள் மன்றச் சட்டம்<br>• (2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) இளைஞர் படையணிச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) சிறுவர்கள் மற்றும் இளவயது நபர்கள் பற்றிய கட்டளைச் சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியச் சட்டம் |

| | | |
|---|---|---|
| (2) | அவ்வறிவித்தலில் "இல. (6) வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:- | |
| | (அ) | அத்தலைப்பு "(6) புத்தசாசன அமைச்சர்" எனவும் |
| | (ஆ) | அதன் நிரல் I, II மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "இல.(27) புத்தசாசன அமைச்சர்" என்ற தலைப்பின் கீழுள்ள நிரல் I, II மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்; |

| | |
|---|---|
| (3) | "இல (6) புத்தசாசன அமைச்சர்" என்ற தலைப்பில் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 7 ஆவது விடயத்துக்குப் பின்னர் கீழ்க்காணும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;<br>"8. அருகிச் செல்லும் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் பிராணி வகைகளின் சர்வதேச வர்த்தக சமவாயத்தின் பங்குதாரர்களது 2019 மாநாட்டினை (CITES) கூட்டிணைப்பதும் அது தொடர்பான அலுவல்களும்.<br>9. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குமுரிய செயற்பாடுகள்<br>10. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை" |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | | |
|---|---|---|
| (4) | அவ்வறிவித்தலில் "இல. (8) நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:- | |
| | (அ) | அதன் நிரல் I இல் 14 ஆவது விடயத்துக்குப் பின்னர் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;<br>"15. இலங்கை மத்திய வங்கியுடன் கூட்டிணைந்து நிதிக் கொள்கைகளைத் தயாரித்தலும் பேரினப் பொருளாதார முகாமைத்துவமும்<br>16. வருமானங்களைத் திரட்டுதலும் செலவுகள் பற்றிய தொடராய்வும்" |
| | (ஆ) | அதன் நிரல் I இல் 15 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்; |
| | (இ) | அதன் நிரல் II இல் 22 ஆவது விடயத்துக்குப் பின்னர், கீழ்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;<br>"23. இலங்கை மத்திய வங்கி<br>24. இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழு" |
| | (ஈ) | இதன் நிரல் II இல் 23 ஆவது விடயத்திலிருந்து 36 ஆவது விடயம் வரை அதற்கமைய மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்; |
| | (உ) | அவ்வறிவித்தலில் நிரல் III இல் "(1978 ஆம் அண்டின் 15 ஆம் இலக்க) இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டம்" என்பதற்குப் பின்னர் கீழ்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;<br>• (1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) நிதிசார் நீதிச் சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) இலங்கையின் பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுச் சட்டம் |

| | | |
|---|---|---|
| (5) | அவ்வறிவித்தலில் "இல. (11) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்" என்ற தலைப்பை பின்வருமாறு திருத்துவதன்மூலம்; | |
| | (அ) | அத்தலைப்பை "இல. (11) அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி அபிவிருத்தி<br>அமைச்சர்" எனவும்; |
| | (ஆ) | அதன் நிரல் I, II மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "இல. (30) அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்" என்ற தலைப்பின் கீழுள்ள நிரல் I, II மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்; |

| | | |
|---|---|---|
| (6) | (அ) | "இல. (11) அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்" என்ற தலைப்பில் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 10 ஆவது விடயத்தையடுத்து பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;<br>"11. கண்டி பிரதேசத்தினுள் பொருளாதார, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணித்தலும் கூட்டிணைத்தலும்.<br>12. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குமுரிய செயற்பாடுகள்<br>13. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை" |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | | |
|---|---|---|
| | (ஆ) | "இல. (11) அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்" என்ற தலைப்பில் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 09 ஆவது விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தைப் பதிலீடு செய்வதன் மூலம்;<br><br>"09. வரையறுக்கப்பட்ட லங்கா லிட்ரோ காஸ்" |

| | |
|---|---|
| (7) | அவ்வறிவித்தலில் அபிவிருத்தி பணிப்பொறுப்புகள் அமைச்சர் இல. (15) எனும் தலைப்பை நீக்குவதன்மூலம்; |

| | |
|---|---|
| (8) | அவ்வறிவித்தலில் இல. (16) முதல் இல.(20) வரையான தலைப்புகளை மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்; |

| | | |
|---|---|---|
| (9) | அவ்வறிவித்தலில் இல. (21) கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:- | |
| | (அ) | அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 11 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;<br><br>12. உள்நாட்டில் நீண்டகாலமாக இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்யும் செயலணியின் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு உரிய நடவடிக்கைகளை கூட்டிணைப்புச்செய்தல்;<br><br>13. வன்னி மாவட்டத்தின் விசேட பிரதேசங்கள் சார்ந்ததாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான வாழ்வாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை கூட்டிணைப்புச் செய்தல்"<br><br>14. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குமுரிய செயற்பாடுகள்<br><br>15. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை" |
| | (ஆ) | அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 10 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்; |
| | (இ) | அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 9 ஆவது விடயத்திற்குப் பின்னருள்ள ஏனைய விடயங்களை அதற்கமைய உரியவாறு மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்; |

| | |
|---|---|
| (10) | அவ்வறிவித்தலில் இல. (20) முதல் (26) வரை மீண்டும் இலக்கமிடுவதன் மூலம் |

| | | |
|---|---|---|
| (11) | அவ்வறிவித்தலில் புத்தசாசன அமைச்சர் இல. (27) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:- | |
| | (அ) | அத்தலைப்பை "இல. (26) வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்" எனவும்; |
| | (ஆ) | அதன் நிரல் I, II மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "இல. (6) வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்" என்ற தலைப்பின் கீழுள்ள நிரல் I, II மற்றும் III ஆம் நிரல்களில் காட்டப்பட்டுள்ள விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்; |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | | |
|---|---|---|
| (12) | அவ்வறிவித்தலில் இல. (28) முதல் (29) வரை மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்; | |

| | | |
|---|---|---|
| (13) | அவ்வறிவித்தலில் "அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் இல. (30)" என்ற தலைப்பை பின்வருமாறு திருத்துவதன்மூலம்; | |
| | (அ) | "இல. (29) உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்" எனவும்; |
| | (ஆ) | அதன் நிரல் I, II மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "இல. (11) உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்" என்ற தலைப்பின் கீழுள்ள நிரல் I, II மற்றும் III ஆம் நிரல்களில் காட்டப்பட்டுள்ள விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்; |

| | | |
|---|---|---|
| (14) | அவ்வறிவித்தலில் இல. (31) என்ற தலைப்பை மீண்டும் இலக்கமிடுவதன்மூலம் | |

| | | |
|---|---|---|
| (15) | அவ்வறிவித்தலில் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் இல. (32) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:- | |
| | (அ) | அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 8 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்; |

| | | |
|---|---|---|
| (16) | அவ்வறிவித்தலில் இல. (32) முதல் (36) வரையான தலைப்புகளை மீண்டும் இலக்கமிடுவதன்மூலம் | |

| | | |
|---|---|---|
| (17) | அவ்வறிவித்தலில் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு அமைச்சர் இல. (37) என்ற தலைப்பை நீக்குவதன்மூலம்; | |

| | | |
|---|---|---|
| (18) | அவ்வறிவித்தலில் இல. (38) முதல் (39) வரையான தலைப்புகளை மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்; | |

| | | |
|---|---|---|
| (19) | அவ்வறிவித்தலில் "இல. (40) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:- | |
| | (அ) | "இல. (39) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர்" எனவும்; |
| | (ஆ) | அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 12 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;<br><br>"13. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வளிப்பு மற்றும் மீளக்குடியமர்த்துதலுக்கான பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் அரச நிகழ்ச்சித்திட்டங்களுக்கும், கருத்திட்டங்களுக்கும் உரிய கொள்கைகளை வகுத்தல், செயற்படுத்துதல் மற்றும் கூட்டிணைத்தல்<br><br>14. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குமுரிய செயற்பாடுகள்<br><br>15. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை" |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | | |
|---|---|---|
| | (இ) | அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 3 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்; |
| | (ஈ) | அதன் நிரல் II இல் 4 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்; |
| | (உ) | அதன் நிரல் III இல் "1939 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) சட்டத்தை" நீக்குவதன்மூலம் ; |

| | |
|---|---|
| (20) | அவ்வறிவித்தலில் இல. (40) முதல் (42) வரையான தலைப்புகளை மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்; |

| | | |
|---|---|---|
| (21) | அவ்வறிவித்தலில் "இல. (43) சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:- | |
| | (அ) | அவ்வறிவித்தலில் தலைப்பு "இல. (41) கருத்திட்ட முகாமைத்துவம், இளைஞர் அலுவல்கள் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்" எனவும்; |
| | (ஆ) | அவ்வறிவித்தலில் சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர் இல. (43) இன் கீழுள்ள அதன் நிரல் I, II மற்றும் III இற்குப் பதிலாக பின்வரும் திருத்தங்களைப் பதிலீடு செய்வதன்மூலம்; |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. கருத்திட்ட முகாமைத்துவம், இளைஞர் அலுவல்கள் மற்றும் தென் அபிவிருத்தி பற்றிய விடயங்களுக்கு உரியதாக நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்<br>2. பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல்<br>3. அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் உற்பத்திப் பெருக்கத்தை நிலைநாட்டும் பொருட்டு ஏனைய உரிய அமைச்சுக்களுடன் கூட்டிணைப்புச் செய்தல் | 1. தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம்<br>2. இளைஞர் படையணி<br>3. தேசிய இளைஞர் விருதுவழங்கல் அதிகாரசபை<br>4. வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு<br>5. தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையம்<br>6. காலி மரபுரிமை மன்றம்<br>7. தேசிய நடவடிக்கைக் கூடம்<br>8. தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம்<br>9. போராட்டம், கலவரம், சிவில் பிரச்சினை மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியம் | • (1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) தேசிய இளைஞர் சேவை பேரவைச் சட்டம்<br>• (2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) இளைஞர் படையணிச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் பற்றிய கட்டளைச் சட்டம்<br>• (1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1994 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) காலி மரபுரிமை மன்றச் சட்டம்<br>• (2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இலங்கைப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுச் சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 4. தேசியக் கொள்கைகளை மதிப்பீட்டுக்காக தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருக்கு உதவுதல்<br>5. இளைஞர் அலுவல்கள் தொடர்பான விடயங்களுக்குரிய கருத் திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்<br>6. இளம் சமூகத்தினரை சரியாக வழி நடாத்துவதற்கான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட உளப் பாங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்துதலும்<br>7. இளம் சமூகத்தினரை மையப்படுத்திய சர்வதேச ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்<br>8. தொழில் வாய்ப்பற்ற இளைஞர்களை மையமாகக் கொண்ட ஆக்கத்திறன் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்<br>9. இளைஞர் அமைப்புகளின் விடயங்கள்<br>10. இளைஞர் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய தொண்டர் சேவைத் திட்டங்களை வகுத்தமைத்தல்<br>11. கைத்தொழில் ஊக்குவிப்பு உள்ளடங்கலாக தெற்குப் பொருளாதார வலயத்தினை வலுவூட்டுவதற்காக பொருளாதார, சமூக அபிவிருத்தி ரீதியிலான நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத் திட்டங்களையும் ஒருங்கிணைப்புச் செய்தல் | 10. இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு<br>11. கருத்திட்ட முகாமைத்துவ மேற்பார்வைத் திணைக்களம்<br>12. ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்<br>13. மிலோதா நிறுவனம் | • (1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியச் சட்டம்<br>• (1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்<br>• வேறேதேனும்அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 12. அம்பாந்தோட்டை பொருளாதார வலயம், தெற்கு சுற்றுலா அபிவிருத்தி வலயம், அம்பாந்தோட்டை விமான - கப்பற்றுறை சார் அனைத்து திட்ட வளங்களை மையமாகக் கொண்ட தென் மாகாணத் தினுள்ளே உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்<br>13. தென் மாகாண அபிவிருத்திச் சபையைத் தாபித்தல்<br>14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக் கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள்<br>15. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

| | | |
|---|---|---|
| (22) | அவ்வறிவித்தலில் தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் இல. (44) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:- | |
| | (அ) | அதன் தலைப்பு "(42) தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்" எனவும்; |
| | (ஆ) | அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 5 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்;<br>6. வெளிநாட்டு தொழில்வாய்ப்பு தொடர்பான விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்<br>7. புலம்பெயர் ஊழியர்களின் தொழில்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கலும் நலனோம்புகையை மேம்படுத்தலும்<br>8. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்குச் செல்லும் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக வேண்டிய புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துதல்<br>9. வேலைவாய்ப்பு முகவராண்மைகளின் ஒழுங்குறுத்துகையும் மேற்பார்வையும் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | | |
|---|---|---|
| | | 10. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக தொழில்ரீதியான வழிகாட்டல்களை வழங்குதல்<br>11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக் குரியதான செயற்பாடுகள்<br>12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் |
| | (இ) | அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 4 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;<br>5. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்<br>6. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மை |
| | (ஈ) | அதன் நிரல் III இல் "இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் (2006 இல.19)" இற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;<br>• (1985ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டம்<br>• வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மைச் சட்டம் (1980 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) |

| | | |
|---|---|---|
| (23) | அவ்வறிவித்தலில் "இல. (45) தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்"-) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:- | |
| | (அ) | இல. (43) தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் |

| | | |
|---|---|---|
| (24) | அவ்வறிவித்தலில் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர் இல. (46) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:- | |
| | (அ) | "இல.(44) ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்" |
| | (ஆ) | அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 4 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;<br>"5. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன்மூலம் மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை உயர்த்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை விசேடமாக கிழக்கு மாகாணத்தினுள் செயற்படுத்துதல்<br>6. புவி வளங்களில் நிலைபேறான பயன்பாட்டை மேம்படுத்தும் வகையிலான நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங்களையும் செயற்படுத்துதல்<br>7. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரிய செயற்பாடுகள்<br>8. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை" |
| | (இ) | அவ்வறிவித்தலில் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 2 ஆவது விடயத்திற்குப் பின்னர் கீழ்க்காணும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்;<br>"3. கந்தளாய் சீனிக் கம்பனி" |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | |
|---|---|
| (25) | அவ்வறிவித்தலில் இல. (47) முதல் (51) வரை மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்; |

| | | |
|---|---|---|
| (26) | (அ) | அவ்வறிவித்தலில் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் இல. (51) என்ற தலைப்பில் I, II மற்றும் III ஆகிய நிரல்களுக்குப் பின்னர், கீழ்க்காணும் புதிய தலைப்பையும், I, II மற்றும் III நிரல்களையும் விடயங்களையும் சேர்ப்பதன்மூலம்; |

**(50) சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. சட்டமும் ஒழுங்கும் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்<br>2. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல்<br>3. சமூக ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் விரிவான சீர்திருத்தங்களையுடைய உபாய மார்க்கங்களை நடைமுறைப்படுத்துதல்<br>4. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆலோசனையின்படி பொலிஸ் சேவையின் வினைத்திறனை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>5. சமூகச் சீரழிவாக மாறியுள்ள பல்வேறான குற்றங்கள் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கும் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்<br>6. வாகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு | 1. பொலிஸ் திணைக்களம்<br>2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை<br>3. இளந்தவறாளிகளுக்கான பயிற்சிப் பாடசாலைகள் | • (1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) பொலிஸ் கட்டளைச் சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க) போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கு எதிரான சமவாயங்கள் சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) ஔடதங்களுக்கு அடிமையான ஆட்கள் (சிகிச்சை அளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) பற்றிய சட்டம்<br>• (1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 7. அபாயகர ஔடதங்களின் பாவனையின் தடுப்பும் கட்டுப்பாடும் | | |
| 8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 9. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

*4-390*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.